Doi: 10.60072/book.icoge2026.130

# குறள் கூறும் நிதி

**முனைவர் பா. லயோலா சூலியட் மேரி,**
**இணைப் பேராசிரியர்,**
**பாத்திமா கல்லூரி,**
**தமிழ் உயராய்வு மையம், மதுரை.**

## முன்னுரை

ஆதிகாலத்தில் வாழ்ந்த மனிதன் இந்த உலகம், மண்ணாகவும் மலையாகவும் நீராகவும் நெருப்பாகவும் விண்ணாகவும் காடாகவும் நாடாகவும் இருந்த சூழலில் வாழ்ந்து வந்தான். அத்தகைய இயற்கைச் சூழலில் குடும்பத்தை அமைத்து அதை நிர்வகித்துப் பண்பாட்டைப் பேணிப் பாதுகாத்தான். தனிமனித நிலையிலும் சமூக அமைப்பிலும் வாழும்போது தனது தேவைகளை நிறைவேற்றல் அவனுக்கு அவசியமானதாக அமைந்தது. அதற்கு முழுமுதற்தேவையாக அமைந்தது பொருளே என்பதை உணர்ந்தான். பின்பு உணவு, உடை, உறையுள் என அவனது முதன்மையான தேவைகள் பெருகிய போது, தேவைகளை நிறைவேற்றிக்கொள்ள ஆக்கப்பூர்வமான பணிகளையும் பண்டங்களையும் ஆடைகளையும் படைத்தளித்த சூழலில் பொருளின் தேவையையும் உணரத் தொடங்கினான். எனவே இயற்றல், ஈட்டல், காத்தல், வகுத்தல் என்ற அடிப்படையில் பொருளின் சிறப்புகளை அறியத் தொடங்கினான். பொருளாதார வளம் பெற்றவர்கள் சமூகத்தில் மதிப்பும் மரியாதையும் பெற்றவர்களாகக் கருதப்பட்டனர். இந்நிலை இன்றளவும் தொடர்கிறது என்பதில் ஐயமில்லை. மனித வாழ்வில் பொருளின்

அவசியத்தையும், அதன் மேன்மை மற்றும் தன்மைகளையும் திருவள்ளுவர் தெளிவாக எடுத்துரைக்கிறார்.

**பொருளின் மேன்மை**

அன்பை அடிப்படையாகக் கொண்ட வாழ்வை நிலைநிறுத்துவதற்கு பொருள் முக்கியமான கருவியாக அமைகிறது. பொருள் இல்லாதவர்களுக்கு உலகியல் வாழ்க்கை சீராக அமையாது என்பதைத் திருவள்ளுவர் வலியுறுத்துகிறார். பொருள் இல்லார்க்கு இந்த உலக வாழ்வு இல்லை என்பதை அறத்துப்பாலில்,

“அருளிலார்க்கு அவ்வுலகம் இல்லை பொருளிலார்க்கு
இவ்வுலகம் இல்லாகி யாங்கு" (குறள். 247)

என்று நினைவூட்டுகிறார். பொருட்பாலில் ‘பொருள் செயல்வகை’ என்ற அதிகாரத்திலும் இதனை வலியுறுத்துகிறார். அறத்துப்பாலில் அருளை உயர்த்திக் கூறும் சூழலில், உவமையாகப் பொருளை முன்வைத்து அதன் சிறப்பை விளக்குகிறார். அருள் நிலைபெற்று வளர்வதற்குப் பொருள் துணையாக இருப்பதாக அவர் கருத்துரைக்கிறார். அன்பு பெற்ற அருள் என்னும் குழந்தையை, பொருள் செவிலித்தாயாக இருந்து வளர்த்தால் தான் வளரும் என்கிறார்.

“அருளென்னும் அன்பீன் குழவி பொருளென்னும்
செல்வச் செவிலியால் உண்டு." (குறள். 757)

இவ்வாறு கூறியபின் அறமும் இன்பமுமாகிய வாழ்க்கைப் பகுதிகளுக்குப் பொருள் கட்டாயம் வேண்டும் என்றும் தெரிவிக்கின்றார். பொருள் பெற்றவர்க்கே அற வாழ்க்கையும் எளிது, காதலாகிய இன்பவாழ்க்கையும் எளிது என்கிறார். இதனை,

”அறன்ஈனும் இன்பமும் ஈனும் திறன்அறிந்து
தீதின்றி வந்த பொருள்" (குறள். 754)

என்ற குறட்பாவிலும்,

"ஒண்பொருள் காழ்ப்ப இயற்றியார்க்கு எண்பொருள்

ஏனை இரண்டும் ஒருங்கு" (குறள். 760)

என்ற குறட்பாவிலும் விளக்குகிறார்.

திருவள்ளுவர் பொருட்பாலில் பொருள் செயல்வகை அதிகாரத்தில் நல்லநாட்டின் வாழ்க்கையை விரித்துரைக்கிறார். ‘வினையே ஆடவர்க்கு உயிரே’ (135) என்ற இலக்கிய வரியும் வினையும் அதன்வழி பெறப்படும் பொருளும், மதிப்பும் சங்ககாலம் தொட்டு சிறப்பிக்கப்படுகிறது என்பது ஏற்புடையதே.

“இல்லாரை எல்லாரும் எள்ளுவர் செல்வரை

எல்லாரும் செய்வர் சிறப்பு" (குறள். 752)

எனும் குறள்வழி, பொருள் இல்லாவிட்டால் இழிநிலைக்கு ஆளாக நேரிடும் என்கிறார். எனவே உழைத்துப் பொருள் தேட வேண்டும் என்றும் உழைத்து ஈட்டிய பொருளைக் கொண்டு செய்யும் ஈகையே ஒருவனுக்குச் சிறப்பினைத் தரும் என்றும் கூறுகிறார்.

“கல்லானேயானாலும் கைப்பொருள் ஒன்றுண்டாயின்

எல்லாரும் சென்றால் கெதிர் கொள்வர் - இல்லானை

இல்லாளும் வேண்டாள் மற்றீன்றெடுத்ததாய் வேண்டாள்

செல்லாதவன் வாயிற் சொல்" (நல்வழி 34)

என்ற நல்வழிப் பாடல் பொருள் இல்லாதவனைப் பெற்ற தாயும் மனைவியும் விரும்பார் என்று கூறுகிறது. மேலும் கல்வியறிவே இல்லாதவனாயிருந்தாலும் செல்வமுடையவனாயின் அவனை எதிர்சென்று எல்லோரும் சிறப்புச்செய்வர் என்றும் கூறுகிறது.

**நாட்டின் பொருள்வளம்**

ஒரு நாட்டின் மேன்மை அந்நாட்டின் பொருள் வளத்தை அடிப்படையாகக் கொண்டு அமைகிறது. அத்தகைய நாட்டில் அரசியலில் பொறுப்பேற்று ஆட்சி நடத்துவோர் அடிக்கடி நாடுவது பொருளைத்தான். மற்றவர்கள் உழவும் தொழிலும் செய்து நாடி நிற்பதுவும் பொருளைத்தான். அத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த பொருளாதாரத் துறையில் நாட்டை ஆளும் தலைவனுக்குச் சில கடமைகள் உண்டு. பொருள் வரும் வழிகளைப் பெருக்க வேண்டும்.

வந்த வருவாயைத் திரட்டிச் சேர்க்க வேண்டும். சேர்த்த பொருளை அழிவுபடாமல் காக்க வேண்டும். பிறகு அவற்றைச் செலவுக்கு உரிய துறைகளில் சரியாக வகுத்துச் செலவு செய்ய வேண்டும். இவ்வாறு வருவாய் பெருக்கும் துறையிலும் வரவுசெலவுத் திட்டத்திலும் வல்லவனாகத் திகழ்பவனே சிறந்த தலைவனாவான். அவனது அரசே சிறந்த அரசு என்பதை,

“இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்லதுஅரசு"( குறள். 385)

என்ற குறள் வழி எடுத்துக்காட்டுகிறார் வள்ளுவர். இதன்வழி பொருளைப் பெறுவதோடு அதனைப் பராமரித்துப் பெருக்க வேண்டியதும் அரசின் கடமை என்பது தெளிவாகிறது.

**வாழ்வியல் கடமை**

தலைவனின் பொருளாதாரக் கடமைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய ஒழுக்கநெறிகளை விளக்கிய திருவள்ளுவர், தனிமனிதன் பிறர்நலன் கருதி உதவும் பண்பை வளர்த்துக்கொள்ள வேண்டியதன் தேவையையும் எடுத்துரைக்கிறார். ஒப்புரவறிதல் என்னும் அதிகாரத்தில், ‘இல்லென இரந்துவந்தார் யாவர்க்கும் வரையாது கொடுக்கும் ஆற்றல் இல்லையெனினும் தம்மளவிற்கும் தம் வருவாய் அளவிற்கும் ஏற்ப, தக்கார்க்குத் தக்கன அறிந்து கொடுத்தலே சிறப்பு’ என்கிறார். அதிலும் குறிப்பாக ‘ஒப்புரவு’ என்னும் அதிகாரத்தில்,

“தாளாற்றித் தந்தபொருளெல்லாந் தக்கார்க்கு
வேளாண்மைசெய்தற் பொருட்டு” (குறள் 212)

என்ற குறளில் ஒருவன் முயன்று ஈட்டிய பொருளெல்லாம் தகுதி உடையார்க்கு உபகரித்தற்காகவாம் என்று உரை விளக்கமளிக்கிறார் மணக்குடவர். இதனையே நாலடியார்,

”. . . . . . . . . . . . . . . . .தெரியுங்கால்
செல்வம் உடையாரும் செல்வரேதற் சேர்ந்தார்
அல்லல் களைப எனின்" (நாலடி.,170)

என எடுத்தியம்புகிறது.

“ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்
பேரறி வாளன் திரு" (குறள். 215)

உலக நலனைக் கருத்தில் கொண்டு செயல்படும் உயர்ந்த அறிவுடையவரின் செல்வம், ஊரார் அனைவரும் பயன்படுத்தும் நீர்நிறைந்த குளத்தைப் போன்றது என வள்ளுவர் குறிப்பிடுகிறார். இக்கருத்திற்கு விளக்கம் அளிக்கும் பரிமேலழகர், அத்தகைய செல்வம் தனிப்பட்ட நலனுக்காக மட்டுமன்றி சமூகத்தின் அனைத்துத் தரப்பினருக்கும் பயனளிப்பதாக அமைகிறது எனக் கூறுகிறார். இச்செய்தியினைக் கம்பராமாயணமும்,

“ஊருணி நிறையவும் உதவுமாடுயர்
பார்கெழு பழுமரம் பழுத்தற் றாகவும்" (கம்பராமா., 1480)

என்று எடுத்தியம்புகிறது.

‘ஒப்புரவு’ அதிகாரம் போலவே ‘ஈகை’ அதிகாரத்திலும் வறியவர்க்கு அளிக்கப்படும் பொருள் குறித்து வள்ளுவர் கூறுகிறார். ஈகையாவது, தரித்திரராய் வந்து ஏற்கிறவர்களுக்கு இல்லை என்று கூறாது தானம் கொடுக்கிறது என்கிறார் கவிராசர்.

“வறியார்க்கொன்று ஈவதே ஈகைமற் றெல்லாம்
குறியெதிர்ப்பை நீர துடைத்து." (குறள். 221)

இக்குறளுக்கு வறியார்க்குக் கொடுப்பதே கொடை மற்றதெல்லாம் வட்டிக்குக் கொடுப்பதை ஒக்கும் என்று உரை விளக்கமளிக்கிறார் பரிதியார்.

“ஏற்றகை மாற்றாமை என்னானும் தாம்வரையார்
ஆற்றாதார்க் கீவதாம் ஆண்கடன் - ஆற்றின்
மலிகடல் தண்சேர்ப்ப மாறீவார்க் கீதல்
பொலிகடன் என்னும் பெயர்ந்து" (நாலடி. 38)

என்று நாலடியாரும் விளக்கமளிக்கிறது.

வளமுடையவர்கள் வாய்ப்பற்றோருக்கு வழங்கல், பகுத்துண்ணல், இவ்வறப்பணியை வள்ளுவர் விருந்தோம்பல், ஈகை,

ஒப்புரவு, நன்றி, சுற்றந்தழால், வேளாண்மை எனப் பல பெயர் சூட்டிப் பாராட்டுகிறார். வள்ளுவரது குறளில் விருந்தோம்பல், ஒப்புரவறிதல், ஈகை இம்மூன்று அதிகாரங்களும் இல்வாழ்வார்க்கு உரியன என்பார் பரிமேலழகர். 'நன்றியில் செல்வம்' குடிமக்களுக்குரியது. இதிலும் வள்ளுவர் பொருள் வழங்கலையே வற்புறுத்துகிறார். இவ்வாறே இரவு (அதி. 106), இரவச்சம் (அதி. 107) என்னும் இரண்டதிகாரங்களும் ஈகையின் சிறப்பையே விளக்குகின்றன.

அரசியல் தொடர்பான கருத்துக்களில் சுற்றந்தழால் மற்றும் பகுத்துண்ணல் ஆகிய பண்புகளின் அவசியமும் வலியுறுத்தப்படுகிறது. இதனைத் தொடர்ந்து, விருந்தோம்பல், ஒப்புரவறிதல், ஈகை, சுற்றந்தழால், நன்றியில் செல்வம், இரவு, இரவச்சம் ஆகிய ஏழு அதிகாரங்களிலும் திருவள்ளுவர் அறப்பணியின் முக்கியத்துவத்தை விரிவாக எடுத்துரைக்கிறார். எனவே, பொருளாதார வாழ்வில் அறநெறிச் செயல்களுக்கு அவர் வழங்கும் உயர்ந்த இடம் இதன் மூலம் தெளிவாகப் புலப்படுகிறது.

சான்றோர் கண்ட ஒழுகலாறுகளில் தன்னிடம் உள்ளதைப் பகுத்துப் பிறரோடு உண்ணுதல் தான் தலையானது.

"பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை" (குறள். 322)

உழைப்பு மற்றும் வருவாய் ஈட்டுதல் என்பவை தனிமனிதனின் உணவு, உடை, இருப்பிடம் போன்ற அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான வழிமுறைகளாகவே இன்றைய பொருளாதாரக் கோட்பாடுகளும் சமூகப் பார்வைகளும் கருதுகின்றன. எனினும், திருவள்ளுவர் இக்கருத்திற்கு மாறுபட்ட பரிமாணத்தை வழங்குகிறார். அவர், தனிநல மையக் கண்ணோட்டத்திற்குப் பதிலாகப் பிறர்நலத்தை மையப்படுத்திய அணுகுமுறையை முன்வைத்து, பொருளின் பயன்பாடு சமூக நலனுடன் இணைந்திருக்க வேண்டும் என்பதை வலியுறுத்துகிறார்.

**உழைப்பே உயர்வு**

ஈகை மனிதனின் உயர்ந்த அறப்பண்புகளுள் முதன்மையானதாகக் கருதப்படுகிறது. அதேவேளையில், உழைப்பே மனித வாழ்விற்கு பெருமையையும் உயர்வையும் வழங்கும் அடிப்படைக் காரணியாக அமைகிறது. மேலும், வறுமையைப் போக்குவதற்கான வழி இரத்தல் அல்ல; உழைப்பின் மூலம் வாழ்க்கையை முன்னேற்றுவதே சிறந்த நெறி என்பதைத் திருவள்ளுவர் வலியுறுத்துகிறார்.

"இன்மை இடும்பை இரந்துதீர் வாம்என்னும்
வன்மையின் வன்பாட்டது இல்" (குறள். 1063)

இக்குறளின் மூலம், வறுமையை நீக்குவதற்கான வழிமுறையாக இரத்தலை ஏற்றுக்கொள்ளும் மனப்பான்மையைத் திருவள்ளுவர் கடுமையாக விமர்சிக்கிறார். வறுமையால் ஏற்படும் துன்பங்களை இரத்தல் மூலம் போக்கலாம் என்ற எண்ணமே மிகுந்த அறியாமையின் வெளிப்பாடாகும் என்பதை அவர் சுட்டிக்காட்டுகிறார். இதன்வழி, தன்னிறைவு, உழைப்பு மற்றும் முயற்சியின் அவசியத்தை வலியுறுத்தும் சமூகச் சிந்தனையைத் திருவள்ளுவர் முன்வைக்கிறார். வள்ளுவர், வறுமையை வெறுத்த காரணங்களாலேயே 'இரவச்சம்' என்ற அதிகாரத்தையும் இயற்றியுள்ளார். வறுமைக்கு உழைப்புதான் வழி என்கிறார். உழைத்து உண்பதை இனியது என்பதை,

"தெண்ணீர் அடுபுற்கை ஆயினும் தாள்தந்தது
உண்ணலின் ஊங்கினிய தில்." (குறள். 1065)

உழைப்பின் பலனாகக் கிடைக்கும் உணவு சாதாரண கூழாக இருந்த போதிலும், அது இரத்தலால் பெறப்படும் செல்வத்தைவிட மேன்மையானது என்பதைத் திருவள்ளுவர் வலியுறுத்துகிறார். தகுதியுள்ளோரெல்லாம் உழைத்தல் வேண்டும். தகுதி இழந்தோரை ஈகையாளர் பகுத்துண்டு தாங்குவர். இதுவே வள்ளுவர் கண்ட

பொருள் வாழ்வின் அடித்தளம். ஈகைப் பண்பு அவசியம் என்றாலும் ‘உழைப்பே உயர்வு தரும்’ என்றும் சிறப்பிக்கிறார்.

**பொருள் நிலையாமை**

பொருள் விருப்பத்தை உள்ளத்தில் கொண்டிருந்தும், அன்பின் தோற்றத்துடன் வெளிப்படையாக நடந்துகொள்ளும் பொதுமகளிரின் தொடர்பு, கள்ளுண்ணுதல் மற்றும் சூதாட்டம் ஆகியவற்றுடன் இணைந்து பொருளாதாரச் சீர்கேட்டிற்கு வழிவகுக்கும் காரணிகளாகத் திருவள்ளுவரால் சுட்டிக்காட்டப்படுகின்றன. இதன் அடிப்படையில், இத்தகைய பழக்கவழக்கங்களில் ஈடுபடுபவர்கள் சமூகப் பொறுப்புணர்வும் ஒழுக்கநெறியும் கொண்ட பொதுவாழ்க்கைக்கு ஏற்றவர்களாக இருக்க முடியாது என்ற கருத்தை அவர் முன்வைக்கிறார்.

பொருள் மனித வாழ்வின் இன்றியமையாத தேவையாகும் என்பதைத் திருவள்ளுவர் பல்வேறு இடங்களில் எடுத்துரைத்தாலும், செல்வமே வாழ்க்கையின் இறுதி இலக்கு அல்லது முழுமையான நிறைவு என அவர் கருதவில்லை. அதற்கு மாறாக, செல்வத்தின் நிலையாமையைச் சுட்டிக்காட்டி அதன் மீதான பற்றினைக் குறைக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துகிறார். நிலையாமை மற்றும் அவாஅறுத்தல் அதிகாரங்களின் வழி, உலகியல் செல்வங்கள் அழியக்கூடியவை என்பதையும், அவற்றின் மீது ஆசையற்ற மனநிலையே உயர்ந்த செல்வமாகும் என்பதையும் அவர் விளக்குகிறார்.

“அற்கா இயல்பிற்றுச் செல்வம் அதுபெற்றால்
அற்குப ஆங்கே செயல்" (குறள். 333)

இக்குறளில் செல்வநிலையாமை மையக் கருத்தாக அமைகிறது. செல்வம் நிலைத்திராத இயல்புடையதாதலால், அது கைவசம் உள்ளபோதே அழியாத பயனைத் தரும் அறச்செயல்களில் ஈடுபட வேண்டும் என அறிவுறுத்துகிறார். இதன் வழி, பொருளின் நிலையற்ற தன்மையையும் அறத்தின் நிலைத்த தன்மையையும்

ஒப்புநோக்கி, அறச்செயல்களின் முக்கியத்துவத்தை அவர் வலியுறுத்துகிறார்.

“துகடீர் பெருஞ்செல்வந் தோன்றியக்கால் தொட்டுப்
பகடு நடந்த கூழ் பல்லாரோடுண்க
அகடுற யார்மாட்டும் நில்லாதுசெல்வம்
சகடக்கால் போல வரும்” (நாலடி. 2)

என்று நாலடியாரும் பொருள் நிலையில்லாதது என்பதை விளக்குகிறது.

“வேண்டாமை அன்ன விழுச்செல்வம் ஈண்டில்லை
ஆண்டும் அஃதொப்பது இல்." (குறள். 363)

என்று அவாவின்மை போல மிக்கசெல்வம் இல்லை. அதனையொப்பது பிறிதில்லை என்று வள்ளுவர் கூறுகிறார். யாக்கையைப் போலச் செல்வமும் நிலையில்லாதது என்பதை, “செல்வமானது நிலைத்து நிற்காத இயல்பினை உடையது. அத்தகைய செல்வத்தைப் பெற்ற ஒருவன் செய்யக்கூடிய நிலையான அறச்செயல்களை அப்போதே செய்ய வேண்டும்” என்று திருவள்ளுவர் கருத்தை விளக்குகிறார் இரா. வரலட்சுமி.

“கூத்தாட்டு அவைக்குழாத்து அற்றே பெருஞ்செல்வம்
போக்கும் அதுவிளிந் தற்று" (குறள். 332)

எனும் குறளின் வழி, “நாடகத்திற்கு வரும்போது தனித்தனியாக வந்த மக்கள் நாடகம் முடிந்த பிறகு ஒன்று சேர்ந்து ஒரேயடியாய் போய்விடுவது போல வருங்காலத்தில் கொஞ்சம் கொஞ்சமாய் வந்த செல்வம் போகும் காலத்திலும் ஒரேயடியாய் போய்விடும் அத்தகைய செல்வம் நிலையானது என்று மயங்காதே. அப்புல்லறிவால் துன்பத்தை ஏற்காதே" என்று அறிவுறுத்துகிறார் திருவள்ளுவர். இக்கருத்தை வலியுறுத்தும் விதமாக,

“சலத்தால் பொருள் செய்துஏமாத்தல் பசுமண்
கலத்துள்நீர் பெய்து இரீஇ யற்று” (குறள். 660)

என்கிறார் திருவள்ளுவர். இக்குறள், “பாவச் செயல் புரிந்து சம்பாதித்த செல்வத்தையும் பிறரைத் துன்புறுத்திப் பறித்த பணத்தையும் சேர்த்து பூட்டிவைத்தால் என்ன ஆகும்? (அழிந்து போகும்) பச்சை மண்குடத்தில் நீர் நிரப்பி வைத்தது போன்றதாகும் என்று விளக்குகிறது. தொட்டாரைத் தொட்டுக் கொண்டேயிருப்பின் பற்றலாகாது. பற்றகலாகவே வினை குவியும். வினை குவியவே பிறப்பும் இறப்பும் சகடக்கால் போல் மாறிமாறி விளையும். அதற்காகவே மெய்ந்நூல்கள் நிலையாமையை உணர்த்துகின்றன என்கிறார் தண்டபாணிதேசிகர்.

திருவள்ளுவர் பொருளின் அவசியத்தையும் அதன் பயனையும் ஏற்றுக்கொண்ட போதிலும், அதனை மனித வாழ்வின் உயர்ந்த மதிப்பாகக் கருதவில்லை. அன்பு, செய்ந்நன்றி, அடக்கம், ஒழுக்கம், ஒப்புரவு, ஈகை, புகழ், வாய்மை, கல்வி, கேள்வி, அறிவு, கண்ணோட்டம், நட்பு, குடிமை, மானம், சான்றாண்மை போன்ற அதிகாரங்களின் வழி, பொருளைவிட மனிதனின் நற்பண்புகளுக்கே அவர் அதிக முக்கியத்துவம் அளிக்கிறார். இப்பண்புகளே உண்மையான உடைமைகள் எனக் கருதும் திருவள்ளுவர், பொருட்செல்வத்தை நிலையான உடைமையாக ஏற்கவில்லை. அறத்தை அடிப்படையாகக் கொண்ட அவரது சிந்தனையில், மனிதப் பண்புகளே வாழ்வின் உயர்ந்த செல்வங்களாக விளங்குகின்றன. மேலும், வெற்றிபெறும் படையைக் கொண்ட அரசருக்குச் செல்வம் இன்றியமையாததாகக் கருதப்பட்டாலும், அதைவிட உயர்ந்தது அறநெறியும் பண்புடைமையும் என்பதே திருவள்ளுவரின் நிலைப்பாடாக அமைகிறது.

“கேடுஇல் விழுச்செல்வம் கல்வி” (குறள். 400)

“செல்வத்துட் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம்
செல்வத்துள் எல்லாம் தலை” (குறள். 411)

“தம்பொருள் என்பதம் மக்கள்” (குறள். 63)

“வேண்டாமை அன்ன விழுச்செல்வம்” (குறள். 363)

“திறன் அறிந்துசொல்லுகசொல்லை அறனும்
பொருளும் அதனினூஉங்கு இல்” (குறள். 644)
“அருட்செல்வம் செல்வத்துட் செல்வம்” (குறள். 241)
“அறிவுடையார் எல்லாம் உடையார்” (குறள். 430)
“உள்ளம் உடைமை உடைமை” (குறள். 592)
“அறத்தினூஉங்கு ஆக்கமும் இல்லை” (குறள். 32)
“காக்க பொருளாஅடக்கத்தை ஆக்கம்
அதனினூஉங்கு இல்லை உயிர்க்கு” (குறள். 122)
“மனநலம் மன்னுயிர்க்குஆக்கம்” (குறள் 457)
“உறுப்பு அமைந்து ஊறுஅஞ்சா வெல்படைவேந்தன்
வெறுக்கையுள் எல்லாம் தலை” (குறள். 761)

உடைமை, செல்வம், ஆக்கம், வெறுக்கை, திரு, பொருள் - இவை எல்லாம் குறளில் ஒரு பொருளுடைய சொற்கள். இப்பண்புச் செல்வங்கள் எல்லாம் அழியா நிலைபேறுடையவை. பொருட்செல்வம் நிலைபேறு இல்லாதது.

“உள்ளம் உடைமை உடைமை பொருளுடைமை
நில்லாது நீங்கி விடும்.(குறள். 592)

செல்வம் சென்று விட்டால் தேடிக்கொள்ளலாம். ஆனால் அருள் முதலான செல்வங்கள் அழியுமானால் ஆக்கிக் கொள்ளுதல் அரிது; அரிதினும் அரிது. ஆகவே இவையெல்லாம் அரும்பொருள்கள். பொருட்செல்வம் வெறும் பொருள் என்கிறார்.

“பொருள் அற்றார் பூப்பர் ஒருகால் அருள்அற்றார்
அற்றார் மற்றுஆதல் அரிது. (குறள். 248)

அருள் முதலிய செல்வங்களை ஆன்றோரிடத்து மட்டுமே காணமுடியும். ஆனால் பொருட்செல்வம் தக்கார், தகவிலர் எனப் பாராது எல்லாரிடமும் குடிகொள்ளுகிறது. இது பொருட்செல்வத்துக்கு உரிய ஒருகுறை.

“அருட்செல்வம் செல்வத்துள் செல்வம் பொருட்செல்வம்
பூரியார் கண்ணும் உள.” (குறள். 241)

இன்றைய உலகின் பொருள் வாழ்வில் நல்லோர் கைப்பட்ட செல்வம் நன்மை நல்கும். தீயோர் கைப்பட்ட செல்வம் தீமையே தரும். பொருள் இல்லார்க்கு இவ்வுலகம் இல்லை; ஆதலால் எல்லோரும் பொருளீட்டுகின்றனர். உலகின் இயல்போ, "கேடும் பெருக்கமும் இல்லல்ல" என இருக்கின்றது. மக்கள் முயற்சியும் ஒருசீராக இருப்பதில்லை; செல்வம் சேர்தலும் ஒருசீராக இல்லை.

பொருளீட்டலுக்குத் தனிமனித முயற்சி மட்டும் போதுமானதன்று; அதனுடன் பொருத்தமான வாய்ப்புகளும் அவசியமாகின்றன. வாய்ப்புகளை உருவாக்கிக் கொள்ள இயன்றாலும், அவை அமையத் தேவையான தொடக்க முதலீடும் ஆதார வளங்களும் இன்றியமையாதவையாகும். "முதலில்லார்க்கு ஊதியம் இல்லை" என்ற கருத்து இதனை வலியுறுத்துகிறது. இத்தகைய காரணங்களால் மக்களின் பொருளாதார வாழ்வில் ஏற்றத்தாழ்வுகள் உருவாகின்றன. அதன் விளைவாக மனக்கசப்பு, பொறாமை, போட்டி மனப்பான்மை மற்றும் சமூக முரண்பாடுகள் தோன்றும் சூழல் ஏற்படுகிறது.

**தொகுப்புரை**

உலக வாழ்க்கைக்குப் பொருள் அவசியமானது. அத்தகைய சிறப்புடைய பொருளை முறையாக ஈட்டி அதனைக் காத்துத் தானதருமங்கள் செய்து அதன்மீது மட்டும் முழு ஈடுபாடு இல்லாமல் வாழ்வதே சிறப்புக்குரிய வாழ்வாகும். தனிமனிதன் மட்டுமின்றி சமுதாயமும் இளமை நிலையாமை, செல்வ நிலையாமை, யாக்கை நிலையாமை எனும் மூன்று நிலைகளை உள்ளடக்கியது. ஆகவே ஆசையை நீக்கி வாழும்போதே அறத்தொடு வாழ்ந்து பிறர்க்கு உதவி வாழ்தல் சிறந்தது என்பது தெளிவாகிறது.

**துணை நின்ற நூல்கள்**


அரசு., (தொ.ஆ), நீதி நூல்கள்,
கங்கை புத்தக நிலையம்,

13, தீனதயாளு தெரு, தி.நகர், சென்னை -17

அருணாசலம்.போ.அ., வள்ளுவர் வகுத்த பொருள் வாழ்வு (1969)
அ.ரவிக்குமார்,19, மேலரதவீதி, திருச்செந்தூர், நெல்லை மாவட்டம்

இராமசாமி, டாக்டர் அ., குறள் கூறும் பொருளியல், மதுரைப் பல்கலைக்கழகக் கட்டுரை, (1970).

கவிராஜ பண்டிதர், திருக்குறள், சாது அச்சுக் கூடம், இராயப்பேட்டை, சென்னை.

கலியாண சுந்தரனார்,திரு.வி., திருக்குறள்- விரிவுரை, பூம்புகார் பதிப்பகம், 63, பிரகாசம் சாலை, சென்னை - 8

சுப்பிரமணியன்,ச.வே., (உ.ஆ), சங்க இலக்கியம் எட்டுத்தொகை, தொகுதி -1,2 மணிவாசகர் பதிப்பகம், 31, சிங்கர் தெரு, பாரிமுனை, சென்னை – 600 108. முதல்பதிப்பு, 21, சூன், 1990, 2010.

தண்டபாணி தேசிகர்,ச., திருக்குறள் உரைக்களஞ்சியம், பதிப்புத் துறை, மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை -21

பதிப்பாசிரியர் குழு, கம்பராமாயணம், அண்ணாமலைப் பல்கலைக்கழகம் பதிப்பு, அண்ணாமலை நகர்.

புறநானூறு உ.வே.சா பதிப்பு, (1950), சென்னை – 5

முருகரத்னம்,தி., குறள் கண்ட பொருள்வாழ்வு,

மதுரை காமராசர்
பல்கலைக்கழகம், மதுரை -21
முதல் பதிப்பு 1973

வரலட்சுமி.இரா., திருவள்ளுவரின் பொருளாதாரச் சிந்தனைகள்,
பிரியா பதிப்பகம்,
விருகம்பாக்கம்,
சென்னை – 92, பதிப்பு, 2003.